திரு. கே. டி. கே. தங்கமணி : கல்வியின் ஒரு பகுதியாக சுற்றுலாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் தமிழகத்திலுள்ள சில சென்டர்களுக்குத்தான் அனுப்புகிறார்களா ? வெளிமாநிலங்களுக்கும் அனுப்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இவற்றில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று டிப்ளமா கோர்ஸ். இதுவும் 3 தரமாகப் பிரிக்கப்பட்டு, இந்த 3 குழுவினரும் மூன்று இடங்களுக்குப் போகிறார்கள். முதல் பாச் தென்னிந்தியா. இரண்டாவது பாச் வட இந்தியா, மூன்றாவது பாச் வட கிழக்குப் பகுதி—என்பதாக மூன்று கூறுகப் பிரித்து அனுப்பப்படுகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வருவோருக்கு தனிப்பட்ட மருத்துவ வசதி

* 283 வினா—திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் வருவோருக்கு, தனிப்பட்ட மருத்துவ வசதி குறித்தும் அதற்காகும் செலவைத் திரும்பப் பெறுவது குறித்தும், மதுரைப் பஞ்சாலைத் தொழிற்சங்கங்களின் தொழிலாளர் தலைவர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ) ஆம். மதுரை பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளரிடமிருந்து 21—3—1970-ல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் திரு. டி. சின்னன் என்னும் தொழிலாளி அவர் தனிப்பட்ட முறையில் செய்து கொண்ட மருத்துவச் சிகிச்சைக்கான செலவைத் திருப்பி அளிக்கும் கோரிக்கை சென்னை சுகாதார–குடும்ப நல இயக்குநரால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

(இ) மேற்படி தொழிலாளி தனது சிகிச்சைக்கான செலவு ரூ. 300-ஐ திருப்பியளிக்கக் கோரியுள்ளார். ஆனால் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (மருத்துவப் பலன்கள்) விதிகளின்படி ஒரு தொழிலாளி, மருத்துவரின் ஆலோசனைக்கு மாறாக, திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளிலிருந்து வெளியேறி, தனது சௌகரியத்திற்கேற்றபடி, தனிப்பட்ட மருத்துவ சிகிச்சையை மேற்கொண்டால் அந்தச் சிகிச்சைக்கான செலவுத் தொகையை திருப்பி பெறுவதற்கான அவரது கோரிக்கை அனுமதிக்க இயலாது. இவ்வாறு மேற்படி தொழிலாளிக்குத் தனியே அறிவிக்கப்பட இருக்கிறது.

1971 ஜூலை 20]

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையிலே ரயில்வே காலனிக்கு அருகாமையில் இந்த இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதே, அங்கே வெகு நேரம் இருநூறு பேர், முந்நூறு பேர் பல மணி நேரம் நிற்கவேண்டியிருக்கிறதே, அப்படியானல் அந்த இடத்தை மாற்ற அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினரின் யோசனையைப் பரிசிலிக்கலாம்.

மதுரையிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

* 284 வினு—திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 13—4—1971-ம் தேதியன்று மதுரையில் திறக்கப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை செயல்படத் தொடங்கி விட்டதா?

(இ) ஆமெனில், அங்கு தற்பொழுதுள்ள அகநிலைப் பிணியாளர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ) ஆம்.

(இ) 58.

திரு. கே. டி. கே. தங்கமணி : புதியதாக மதுரையில் ஆரம்பித்திருக்கிற இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் 201 பேர் வரையில் இருக்கலாம் என்று அன்றைக்கு சொல்லப்பட்டது. இப்போது அங்கே அதில் நான்கில் ஒரு பங்குதான் இருப்பதாகச் சொல்கிருர்கள். இன்றுகூட அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்யப்படாமல் இருக்கிறதே, இதற்கு அரசு துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டும் வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்று கூட குடி தண்ணீர் வசதிக்கு மாநகராட்சியில் இருந்து சில லாரிகளில் வந்து கொண்டிருக்கின்றது. இதற்கு மாருக மெயின் கனெக்ஷன் கொடுத்து வியாதியஸ்தர்களுக்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா ? இப்போது சில விசேஷங்கள் வந்துவிட்டால் 12 மணி வரை கூட மாநகராட்சி லாரி வாாது. தண்ணீர் இல்லாது அங்கே உள்ளவர்கள் கஷ்டப்படுகிருர்கள், ஆகவே நிரந்தரத் தண்ணீர் வசதிக்கு உத்தரவாதம் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்று ஆவன செய்யப்படும்.